# சிறப்பு சார்பு நீதிமன்றம், (மோட்டார் வாகன விபத்து இழப்பீடு தீர்ப்பாயம்) திருப்பத்தூர், திருப்பத்தூர் மாவட்டம்
## MCOP .No.4/2022

**நாள் : 23.03.2023**

**எ.ம.சா.** 2 (3ஆம் எதிர்மனுதாரர் தரப்பில்) வது நபரின் வாக்குமூலம் (1959)–ம் ஆண்டின் 54 வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.சீனிவாசன் | மாவட்டம் | : | வேலூர் |
| தந்தை பெயர் | : | திரு.சின்ன எல்லன் | வயது | : | 53 |
| ஊர் | : | பேர்ணாம்பட்டு | தொழில் | : | உதவி மேலாளர் |
| வட்டம் | : | பேர்ணாம்பட்டு | தேசியம் | : | இந்தியன் |

**முதல் விசாரணை:**

நான் யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனியில் உதவி மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். அந்த வகையில் வழக்கு சம்பந்தப்பட்ட விவரங்கள் எனக்கு பரிச்சையம். 3ஆம் எதிர்மனுதாரர் சார்பாக இந்த வழக்கிற்கான நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் என்னால் சொல்லப்பட்டவை மற்றும் உண்மையானவை. அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான்.

1)TN 83 8298 என்ற மனுதாரர் இருசக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை நகல் எ.ம.சா.ஆ.3

2) பொலிரோ சரக்கு வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை நகல் எ.ம.சா.ஆ.4

3) மாதிரி வரைபடம் நகல் எ.ம.சா.ஆ.5

4) 3ஆம் எதிர்மனுதாரர் நிறுவன புலனாய்வு அறிக்கை எ.ம.சா.ஆ.6

மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:

30.01.2020ஆம் தேதியில் TN 83 X 8857 என்ற பொலிரோ வாகனமானது எங்களது நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டிருந்தது என்றால் சரிதான். மேற்படி பொலிரோ வாகனத்திற்கு பதிவு சான்று, ஓட்டுநர் உரிமம், தகுதிச்சான்று, காப்பீடு உரிய அனைத்து ஆவணங்களும் சரியாக இருந்தது என்றால் சரிதான். ஆனால் பேட்ஜ் இல்லை. 1ஆம் எதிர்மனுதாரர் வாகனமானது சிறிய அளவிலான சரக்கு வாகனம் என்றால் சரிதான்.

அதனால் அதற்கு பேட்ஜ் அவசியமில்லை என்றால் சரியல்ல. பொலிரோ வாகன ஓட்டுநரது கவனக்குறைவால்தான் விபத்து ஏற்பட்டதாக நாட்றம்பள்ளி காவல் நிலையத்தார் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்ாறல் சரிதான். மேற்படி குற்ற வழக்கில் 1ஆம் எதிர்மனுதாரரின் ஓட்டுநர் அபராதம் செலுத்தியுள்ளார் என்றால் சரிதான். விபத்தினை பொருத்தமட்டில் மனுதாரர் எங்களது நிறுவனத்திற்கு மூன்றாம் தரப்பினர் என்றால் சரிதான். எனவே விபத்தினால் மனுதாரருக்கு ஏற்பட்ட காயத்திற்கு எங்களது நிறுவனம்தான் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மனுதாரருக்கு விபத்தில் காயம்பட்டு கண்ணில் நிரந்தர குறைபாடு ஏற்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நிரூபண வாக்கு்முலத்தில் கண்டுள்ள சங்கதிகள் வழக்கிற்காக மிகைப்படுத்தி கூறப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மனுதாரர் சாலை விதிகளை பின்பற்றி மெதுவாக சென்றுகொண்டிருந்தார் என்றும், பொலிரோ வாகனத்தின் ஓட்டுநர் தாறுமாறாக ஓட்டிவந்துவிபத்தை ஏற்படுத்தினார் என்று சொன்னால் சரியல்ல.

ஒம்/. J. நாகலட்சுமி @ விஜயராணி,
சிறப்பு சார்பு நீதிபதி (MACT),
திருப்பத்தூர்.